ரூ.881 இலட்சம் மதிப்பீட்டில் 9 கயிறுக் குழுமங்கள் அமைக்க கயிறு வாரியத்திற்குப் பிரேரணைகள் அனுப்பப்பட்டு, மத்திய அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது என்பதையும், அதேபோன்று கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சியில் 10.67 கோடி ரூபாயில் கயிறுக் குழுமம், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன துறையின் மூலமாக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று நம்முடைய மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கயிறு வாரியத்தின் சந்தை மேம்பாட்டுத் திட்டத்தினைத் தொடர்ந்து சிறப்போடு செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில் இதற்காக 2011-2012 ஆம் ஆண்டில் ரூபாய் 53 இலட்சத்து 22 ஆயிரத்து 451 ரூபாயும், 2012-2013 ஆம் ஆண்டில் 58 இலட்சத்து 87 ஆயிரத்து 507 ரூபாயும், 2013-2014 ஆம் ஆண்டில் 65 இலட்சம் ரூபாயும் கயிறு தொழில் சிறப்போடு இருக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மானியங்களை வழங்கி சிறப்பான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

138—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***34481—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் ஆண்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2014 ஜூலை 15]

(அ) மற்றும் (ஆ) மதுரையில் ஆண்களுக்கென தனியாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் 16 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் +2 முடித்துவிட்டு மாணவர்கள் கல்லூரியில் சேருவதற்கு இடம் கிடைக்காமல் சிரமப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே நாடாளுமன்ற உறுப்பினராக 1957-ல் இருந்த, மறைந்த திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களுடைய முயற்சியில் அரசு மீனாட்சி பெண்கள் கல்லூரி துவக்கப்பட்டது. அதற்குப் பின்னால் மதுரையில் அரசு உதவிபெறும் கல்லூரிகள்தான் துவக்கப்பட்டதேயொழிய, கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்குப் பிறகும் மதுரையிலே எந்த ஒரு அரசுக் கல்லூரியும் துவக்கப்படாத நிலைமை இருக்கிறது. எனவே, நம்முடைய மாநில அரசாங்கம் மதுரையிலே ஆண்களுக்கோ அல்லது இரு பாலருக்குமோ கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்குவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 697 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகள் 75 செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அரசு நிதி உதவிபெறும் கல்லூரிகளாக 139 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. உறுப்புக் கல்லூரிகளாக, அதாவது பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளாக 37 கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சுய நிதிக் கல்லூரிகள் தமிழ்நாடு முழுவதும் 446 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 697 கல்லூரிகள் இருக்கும்பட்சத்தில், மதுரை மாவட்டத்தில் மொத்தம்

35 கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் 60 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட ஒரு கல்லூரிதான் இருக்கிறது என்ற ஒரு தவறான கருத்தைச் சொன்னீர்கள். 2012-2013 ஆம் ஆண்டு திருமங்கலம் தொகுதியில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தொடங்கிய பெருமை மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில் Equity Gender, அதாவது பாலினச் சமன்பாடு இருக்க வேண்டும். அதாவது, ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் படிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுவரையிலே தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளில், தனியாக பெண்களுக்கென 5 கல்லூரிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல் இன்றைய காலகட்டத்தில் மற்ற கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதைவிட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு மாணவர்கள் அதிகமாக ஆர்வம் காட்டி வருகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு மட்டும் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கி தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அந்தவகையில் மதுரை பகுதியில் மக்கள்தொகை அதிகமாகி வருகிறது. மாணவ, மாணவிகள் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆர்வமாக இருக்கிறார்கள். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற ஆர்வம் மாணவர்கள் மத்தியிலே இருக்கிறது. அந்த வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவானப் பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை எடுத்துச்செல்லப்பட்டு அதைப் பற்றி ஆராய்ந்து முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 15]

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே கல்லூரி அமைப்பது பற்றிய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரை மீனாட்சி கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் தேவைப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்தக் கல்லூரிக்கு கலை அரங்கம் கட்டுவதற்கு ரூபாய் 30 இலட்சம் நான் வழங்கியிருக்கிறேன். எனவே, மாநில அரசு மதுரை மீனாட்சி அரசு மகளிர் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியைப் பொறுத்தவரையில், உறுப்பினர் சொன்னதுபோல் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்கூட அங்கே ஒரு கலை அரங்கம் கட்ட வேண்டுமென்று அடிக்கடி என்னிடம் பேசி வருகிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், இப்போது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறவகையில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட அத்துணைக் கல்லூரிகளுக்கும் இதுவரை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் நிதி ஒதுக்கித் தந்து, அங்கே கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி). அந்தக் கல்லூரியில் கலை அரங்கம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கித் தந்திருக்கிறேன் என்கிற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேவேளையில், அங்கே கூடுதல் வகுப்பறைக் கட்டடம் தேவை என்கிற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். கூடுதல் வகுப்பறைக் கட்டடம் தேவைப்படுவதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கையை ஏற்று, அந்தக் கல்லூரி முதல்வரின் கோரிக்கையை ஏற்று, இதுவரை இல்லாத அளவிற்கு 797 புதிய பாடப் பிரிவுகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவேதான், அங்கே கூடுதலாக வகுப்பறைக் கட்டடம் தேவைப்படுகிற ஒரு நிலை ஏற்படுகிறது. அந்த தேவையைப் பூர்த்தி செய்கிறவகையில், நிதிநிலைக்கு ஏற்ப இந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவானப் பார்வைக்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வருவேன் என்று சபதம் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய சாதாரண, சாமானிய ஏழை மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு பிறந்ததுமுதல் அவர்களுடைய கடைசி காலம்வரையில் அவர்களுக்குப் பயன்படக் கூடிய பல்வேறு நலத் திட்டங்களை அளித்து, சிறப்புகளைச் செய்து வருகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு கல்வி ஒன்றுதான் சிறந்ததாகக் கருதப்படுவதால் மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு கல்விக்காக பல ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி மாணவர்களுடைய எதிர்காலத்தைச் சிறக்கச் செய்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

நடைபெற்ற தேர்தலில் அரசியல் வல்லுநர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துகளை மாற்றிக்கொள்கின்றவகையில், யார் ஜெயித்தாலும் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் ஜெயிப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு

2014 ஜூலை 15]

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையை இளைஞர்களும், மாணவர்களும் ஏற்று மிகப் பெரிய மகத்தான வெற்றியை, உலகமே வியக்கத்தக்க வெற்றியை அளித்திருக்கிறார்கள் என்பதை யாவரும் நன்கறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், பிறந்த குழந்தைகள்முதல் பெரியவர்கள்வரை அனைவருக்கும் இந்த அரசு செய்துகொண்டிருக்கக்கூடிய சாதனைகள், வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய நல்ல திட்டங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கல்விப் புரட்சியை தமிழ்நாட்டில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் இளைஞர்கள்தான். இளைஞர்கள் இந்த நாட்டினுடைய தூண்கள் என்பதால், சுவாமி விவேகானந்தர் அவர்கள் "துடிப்புள்ள ஆர்வமுள்ள 100 இளைஞர்களை என்னிடத்திலே தாருங்கள்; நல்ல சமுதாயத்தை உருவாக்கிக் காட்டுகிறேன்" என்று சொன்னார்கள். ஆனால், ஒன்றரைக் கோடி தொண்டர்களைக் கொண்டிருக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தலைமையின்கீழ் இயங்கக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்த ஆட்சி, இந்தியாவில் மட்டுமல்ல, உலக அரங்கில், உலக வரைபடத்தில், தமிழ்நாட்டிற்கு என்று ஒரு தனி இடத்தைப் பெறுவது என்பது வெகு தொலைவில் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதி பிற்படுத்தப்பட்ட, சாதாரண, சாமான்ய ஏழை எளிய, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் ஒரு கலைக் கல்லூரி வேண்டுமென்று அந்தத் தொகுதியினுடைய மக்கள் அனைவரும் பணிவன்போடு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில், தமிழக வரலாற்றில் எந்த ஒரு அரசும் செய்யாத ஒரு மிகப் பெரிய சாதனையாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 3 ஆண்டுகால ஆட்சியில் 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கி தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுக் கல்லூரியாக இதுவரை 12 கல்லூரிகளை நம்முடைய தமிழகத்திற்கு வழங்கியிருக்கின்றார்கள். அந்த வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களைப் பொறுத்தவரையில் தொலைதூரத்திலே இருக்கக்கூடிய பகுதிகளுக்கும், அதிக போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளுக்கும், அடிப்படைக் கல்வியே கிடைக்காத பகுதிகளுக்கும் ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் ஆகியோருக்கு உயர் கல்வி போய்ச் சேர வேண்டும் என்ற நோக்கத்தோடும்தான் தமிழகம் முழுவதும் ஆராய்ந்து தொலைதூரத்திலே இருக்கக்கூடிய பகுதிகளைப் பார்த்து, ஆங்காங்கே கல்லூரிகளைத் திறந்து வருகின்றார்கள். அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது மலைவாழ் மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் வாழ்கின்ற அந்தப் பகுதியில் ஒரு கல்லூரி வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இதனை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நிதிநிலைக்கு ஏற்ப ஒரு கல்லூரி துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*